செ.வெ.எண். 559

6–7–2010

# 150 ஆண்டு கால பொதுப்பணித் துறை வரலாற்றில் முதன்முறையாக 15 பொறியாளர்களுக்கு ஒரே நேரத்தில் தலைமைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் பொதுப்பணித் துறை சிறப்புறச் செயல்பட்டு வரும் இந்த வேளையில் – பொதுப்பணித் துறையின் 150 ஆண்டு கால வரலாற்றில் முதன்முறையாக ஒரே நேரத்தில் – ஒரு பெண் பொறியாளர் உட்பட 15 பொறியாளர்களுக்குத் தலைமைப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு பெற்றுள்ள 15 தலைமைப் பொறியாளர்கள், இன்று (6–7–2010) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, நன்றி தெரிவித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வின்போது, முதலமைச்சரின் செயலாளர் திரு. எஸ். இராசரெத்தினம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு. எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. ஜெயராமன், பொதுப்பணித் துறை, தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) திரு. எஸ். கருணாகரன் மற்றும் பொதுப்பணித் துறை பொறியாளர் சங்கச் செயலர் திரு. ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9